## 2020–ம் ஆண்டு ஜனவரி மாதம் 31ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 05.00 மணிக்கு கொமாரபாளையம் நகராட்சி சாதாரணக்கூட்டத்தின் நிகழ்ச்சி நிரல்

**முன்னிலை:– திரு.சி.ஸ்டான்லி பாபு, இ.கலை., அவர்கள். தனி அலுவலர் மற்றும் நகராட்சி ஆணையாளர்**

**பொருள் எண்.1**

கொமாரபாளையம் நகராட்சியில் கீழ்க்கண்ட பணிகளை செய்ய 28.01.2020ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் முதல் அழைப்பில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு கூட்டத்தின் அனுமதிக்கும் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எ ண் | வேலையின் பெயர் | மதிப் பீட்டுத் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் விபரம் | மதிப்பீட்டு சதவீதம் குறைவு / கூடுதல் |
|---|---|---|---|---|
| | குடிநீர் நிதிப் பணிகள் | | | |
| 1. | நகராட்சிக்குட்பட்ட அரசு மருத்துவமனை அருகில் உள்ள குடிநீர் தேக்கத் தொட்டி மற்றும் பேருந்து நிலைய வளாகத்தில் உள்ள குடிநீர் தேக்கத் தொட்டி ஆகிய இரு தொட்டிகளுக்கு பராமரிப்பு பணிகள் செய்ய 25 பணியாளர்களை அனுப்புவதற்கான ஒப்பந்தம் (01.02.2020 முதல் 31.07.2020 வரை) | 24,20,000/– | திருவாளர்கள். ஜி.எஸ்.சி.டெக்னாலஜி அன்ட் சர்வீஸஸ்.<br><br>திருவாளர்கள். ஆர்.கே.கான்ட்ராக்டர்ஸ் | மதிப்பீட்டுத் தொகையினைவிட **0.22 %** குறைவு.<br><br>மதிப்பீட்டுத் தொகையினைவிட **0.84 %** அதிகம். |

**அலுவலகக் குறிப்பு**

முதல் அழைப்பில் வரபெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு தொகையைவிட 0.22 சதவீதம் குறைவான தொகை கொடுத்துள்ள திருவாளர்கள். ஜி.எஸ்.சி.டெக்னாலஜி அன்ட் சர்வீஸஸ் என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம். மேற்காணும் பணிக்கு தீர்மான எண்.357 நாள்.30.12.2019 ஒப்புதல் பெறப்பட்டு, மேற்படி செலவினத்தை இந்நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.3 நாள்.31.1.2020**
அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.2**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.7 சத்தியாபுரி அங்கன்வாடி பள்ளி உள்ள வீதியில் உள்ள வடிகால்கள் மூடுகல் இல்லாமலும், கான்கிரீட் தளம் பழுதடைந்தும் உள்ளதால் அப்பகுதி மக்களுக்கு சுகாதார கேடு விளைவிக்கும் வகையிலும், போக்குவரத்திற்கு இடையூறாகவும் உள்ளது. எனவே, அப்பகுதி மக்களின் நலன் கருதி மழைநீர் வடிகாலுக்கு மூடுகள் அமைக்கவும், பழுதடைந்துள்ள சிமெண்ட் கான்கிரீட் தளத்தினை சீர் செய்யவும் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.1,10,000/–க்கு அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மதிப்பீட்டுத் தொகை ரூ.1,10,000/–க்கு அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி, தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதற்கும், இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.4 நாள்.31.1.2020**
அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.3</u>**

குடிநீர் விநியோகப் பணியில் பணியாளர்களை சப்ளை செய்ய ரூ.13,60,000/—க்கு மதிப்பீடு தயார் செய்து கூட்டப் பொருள் ஒப்புதல் பெற்று மேற்கண்ட பணிக்கு 1.7.2019 முதல் 31.12.2019 வரை ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. தொடர்ந்து பணியாளர்களை சப்ளை செய்ய மதிப்பீடு தயார் செய்து மன்ற ஒப்புதல் பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோர கோப்பு நடவடிக்கையில் உள்ளதால், ஒரு மாத காலத்திற்கு (01.01.2020 முதல் 31.01.2020 வரை) மேற்படி ஒப்பந்ததாரர் திரு.பி.கந்தன் அவர்கள் மூலம் ஏற்கனவே அன்னார் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியின் விலை விபரத்திலேயே பணியாளர்களை சப்ளை செய்யவும், அதற்காக ஆகும் கூடுதல் செலவினத்திற்கும் திருத்திய மதிப்பீட்டிற்கும் ஒப்புதல் வழங்கலாம்.

அலுவலக குறிப்பு

1. குடிநீர் விநியோகப் பராமரிப்பு பணிக்கு பணியாளர்களை சப்ளை செய்வதற்கு ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரரான திரு.பி.கந்தன், என்பவர் மூலம் அவருக்கு வழங்கி வந்த அதே ஒப்பந்தப்புள்ளியின் விலை விபரத்திற்கே ஒரு மாத காலத்திற்கு (01.01.2020 முதல் 31.01.2020 வரை) பணியாளர்களை சப்ளை செய்யவும் அதனால் ஆகும் கூடுதல் செலவினத்திற்கும் திருத்திய மதிப்பீட்டிற்கும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணியினை மேற்கொண்டமைக்கு ஒப்புதல் வழங்கலாம்.
2. மேலும், இதனால் ஏற்படும் கூடுதல் செலவினத்தினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.5 நாள்.31.1.2020**
அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.4</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட பொது சுகாதாரப் பிரிவு 4க்கு என்று தனியாக பகுதி (Division) அலுவலகம் இல்லாததால் வார்டு எண்.25 அண்ணா நகர் பகுதியில் சாலையில் நின்று தினந்தோறும் துப்புரவு பணியாளர்களுக்கு வருகைப் பதிவேடு எடுப்பதற்கும், துப்புரவு பணியாளர்களுக்கு வீதிகள் ஒதுக்கீடு செய்யும் பணிகளும் நடைபெற்று வருகிறது. மேலும், அப்பிரிவு துப்புரவு பணியாளர்களின் பொருட்களை (Sanitary Materials) வைப்பதற்கும் இட வசதி இல்லாததால், பொது சுகாதாரப் பிரிவு 4க்கு வார்டு எண்.25 அண்ணா நகர் பகுதியில் புதியதாக பகுதி (Division) அலுவலகம் கட்ட தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.9,00,000/—க்கு அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மதிப்பீட்டுத் தொகை ரூ.9,00,000/—க்கு அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி, தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதற்கும், இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.6 நாள்.31.1.2020**
அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.5</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட பொது சுகாதாரப் பிரிவு 2க்கு என்று தனியாக பகுதி (Division) அலுவலகம் இல்லாததால் வார்டு எண்.6 நடராஜா நகர் பகுதியில் சாலையில் நின்று தினந்தோறும் துப்புரவு பணியாளர்களுக்கு வருகைப் பதிவேடு எடுப்பதற்கும், துப்புரவு பணியாளர்களுக்கு வீதிகள் ஒதுக்கீடு செய்யும் பணிகளும் நடைபெற்று வருகிறது. மேலும், அப்பிரிவு துப்புரவு பணியாளர்களின் பொருட்களை (Sanitary Materials) வைப்பதற்கும் இட வசதி இல்லாததால், பொது சுகாதாரப் பிரிவு

2க்கு வார்டு எண்.4 பாரதி நகர் பகுதியில் புதியதாக பகுதி (Division) அலுவலகம் கட்ட தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.9,70,000/—க்கு அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மதிப்பீட்டுத் தொகை ரூ.9,70,000/—க்கு அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி, தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதற்கும், இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.7 நாள்.31.1.2020**
அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.6</u>**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு ஒப்பந்த முறையில் கடந்த 15 மாதங்களாக M/s. ரிலையான் பெசிலிடி சர்வீஸ் லிட், சென்னை என்ற நிறுவனத்தின் மூலம் 40 துப்புரவு பணியாளர்கள் பணி செய்யப்பட்டு வருகிறார்கள். இந்நிலையில் ஒப்பந்த காலம் 31.01.2020 உடன் முடிவடைகிறது. மேற்கண்ட பணியானது நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறைகள் ஆணை எண். K.Dis No. 19718/ஞ3/2018 நாள். 20.08.2018இல் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. அந்த அனுமதியில் 40 ஒப்பந்த பணியாளர்கள் மூலம் மூன்று வருடங்களுக்கு அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நிர்ணயம் செய்த தினக்கூலி அடிப்படையில் நிர்ணயம் செய்து கொள்ளலாம் எனவும், மேலும் அத்தொகையுடன் ESI, EPF மற்றும் Life Insurance, Service tax மற்றும் safety equipments போன்ற இனங்களுடன் நகராட்சியில் வழங்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் 01.02.2020 முதல் 31.01.2021 வரை ஒரு வருடங்களுக்கு ஞாயிற்றுக்கிழமை நீங்கலாக 40 துப்புரவு பணியாளர்கள் ஒப்பந்த முறையில் எடுக்க ஆகும் செலவினத் தொகை ரூ.5750000/— மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. அனுமதி வழங்கலாம்.

2. பணியின் அவசர அவசியம் கருதி ஆணையர் (மற்றும்) தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி பணியினை மேற்கொள்ள கூட்டம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.8 நாள்.31.1.2020**
அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.7</u>**

கொமாரபாளையம் நகராட்சி பகுதிகளில் டெங்கு காய்ச்சல் தடுப்பு மற்றும் ஒழிப்பு பணிகள் ஒப்பந்த பணியாளர்கள் அடிப்படையில் கடந்த 02.12.2019 முதல் 60 DBC பணியாளர்கள் மூலம் செய்யப்பட்டு வருகிறது. அதற்கான காலம் 13.03.2020ஆம் தேதியுடன் முடிவடைவதால் தற்போது காய்ச்சல் பாதிப்பு அடைந்தோர் விவரம் அரசு மருத்துவமனை மற்றும் பிற தனியார் மருத்துவமனைகளிடமிருந்தும் வந்து கொண்டிருப்பதாலும், பொது சுகாதாரத்துறை மண்டல பூச்சியியல் வல்லுநர் அவர்களால் இந்நகராட்சி பகுதிகளில் ஆய்வு செய்து கொசுப்புழுக்கள் அளவீடு ( House Index ) 7.5 ஆக இருப்பதாகவும், டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிகள் முறையாக செயல்படுத்திட வேண்டும் என தெரிவித்து இருப்பதால், பொது மக்களின் சுகாதார நலனை கருத்தில் கொண்டு அவசர அவசியம் கருதி இப்பணியினை 14.03.2020 முதல் மேலும் 135 நாட்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்து கொள்ள, அவ்வாறு நியமனம் செய்யும் பணியாளர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர், நாமக்கல் அவர்களால் நிர்ணயம் செய்ய தினக்கூலி அடிப்படையிலும், On skilled (or) Mazdoor's என்ற Catogries நிர்ணயம் செய்த ரூ.345/— மற்றும் EPF, ESI, Insurance, Service tax போன்ற இனங்கள் சேர்த்து 40 DBC பணியாளர்கள் நிர்ணயம் செய்ய ( 135 நாட்களுக்கு ஞாயிறு நீங்கலாக ) ஆகும் செலவினம் ரூ.23,30,000/—க்கு தனி அலுவலர் அவர்களின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. கூட்டப்பொருள் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.9 நாள்.31.1.2020**
அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.8**

இந்நகராட்சியின் பேருந்து நிலையத்தில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான கட்டண கழிப்பிடம் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதால், பொது மக்களுக்கும் பேருந்து நிலையத்திற்கு வந்து செல்பவர்களும் உபயோகப்படுத்த சிரமமான சூழ்நிலை உள்ளது. எனவே, பழுதடைந்த கழிப்பிடத்தினை இடித்துவிட்டு புதியதாக நவீன முறையில் கழிப்பிடம் கட்ட தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.24,30,000/—க்கு அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1). மதிப்பீட்டுத் தொகை ரூ.24,30,000/—க்கு அனுமதி வழங்கலாம்.
2). இச்செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.10 நாள்.31.1.2020**
அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.9**

இந்நகராட்சியின் ஆணையாளர் குடியிருப்பில் முதல் தளத்திற்கு செல்வதற்கு மாடி படிக்கட்டு இல்லாததால், குடியிருப்புக் கட்டிடத்தின் கிழக்கு பகுதியில் மாடி படிக்கட்டு அமைக்கவும் படிக்கு அடிப்பகுதியில் கழிப்பிடம் கட்டவும், குடியிருப்புக்கு தேவையான உட்பகுதியில் அலமாரி (Shelf) அமைக்கவும் குடியிருப்பதற்கு மரக்கட்டில், பெட், மர சோபா மற்றும் Mini R.O. Plant ஆகியவை வாங்கவும் தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.6,30,000/—க்கு அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மதிப்பீட்டுத் தொகை ரூ.6,30,000/—க்கு அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.11 நாள்.31.1.2020**
அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.10**

இந்நகராட்சிக்கு சொந்தமான கட்டிடத்தில் நகர நிலவரித்திட்ட அலுவலகம் செயல்பட்டு வருகிறது. தற்போது இக்கட்டிடம் 2019ம் தேதி டிசம்பர் மாதம் பராமரிப்பு பணிகள் செய்யப்பட்டது. இக்கட்டிடத்தில் தனி வட்டாட்சியர் அமர்வதற்கு அலுமினிய கேபின் அமைத்து கொடுக்குமாறு கேட்டுள்ளார். இதன்படி ஜே.கே.கே.சாலையில் உள்ள தனி வட்டாட்சியருக்கு அலுமினியத்தில் தனி கேபின் அமைக்க தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.1,10,000/—க்கு அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மதிப்பீட்டுத் தொகை ரூ.1,10,000/—க்கு அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.12 நாள்.31.1.2020**
அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.11</u>**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் **2019–2020** ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்பு எண்.**34**ல் கொமாரபாளையம் நகராட்சியில் ரூ.**2.80** கோடி மதிப்பீட்டில் கசடு கழிவு சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டது. மேற்கண்ட அறிவிப்பின் அடிப்படையில் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களின் கடிதம் ந.க.எண்.**3980/2015**/டி**2**, நாள்.**16.08.2019**ம் தேதிய கடிதத்தில் மேற்கண்ட (திட்டத்தின்) பொருள் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் உரிய கருத்துருவினை அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டது. மேற்கண்ட திட்டத்தினை செயல்படுத்த கொமாரபாளையம் நகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் நகராட்சிக்கு சொந்தமான இடம் ஏதும் இல்லாததால், இவ்வலுவலக கடிதத்தின் வாயிலாக மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் கொமாரபாளையம் வட்டாட்சியர் அவர்களுக்கு பணியின் அவசர அவசியம் கருதி கொமாரபாளையம் நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகள் அல்லது கொமாரபாளையம் வட்டம், குமாரபாளையம் அமானி மற்றும் குமாரபாளையம் அக்ரஹாரம் கிராமங்களில் அரசுக்கு சொந்தமான புறம்போக்கு நிலம் **1** ஏக்கர் ஒதுக்கீடு செய்து தரக் கோரியதில், மேற்கண்ட திட்டத்திற்கான தகுதியான புறம்போக்கு நிலங்கள் இல்லை என **9.10.2019**ம் தேதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, இந்நகராட்சி பகுதிகளில் மேற்கண்ட திட்டத்தின்கீழ் அரசுக்கு சொந்தமான புறம்போக்கு நிலம் இல்லை என்பதாலும், **15** கி.மீ. தூரத்திற்கு வெளியே மேற்படி திட்டத்தினை செயல்படுத்துவதற்கு பதிலாக இந்நகராட்சி பகுதிகளிலிருந்து லாரிகள் மூலம் எடுக்கப்படும் கசடு கழிவுகளை அருகில் உள்ள ஈரோடு மாநகராட்சியின் பாதாள சாக்கடை திட்டத்திற்கான கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டு செல்ல ஏதுவாக உள்ளது. எனவே, மேற்கண்ட திட்டத்தினை இரத்து செய்ய தனி அலுவலரின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட திட்டத்திற்கான தகுதியான இடம் இல்லாததால் மேற்படி திட்டத்தினை இரத்து செய்ய அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.13 நாள்.31.1.2020**
அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.12</u>**

இந்நகராட்சி சொந்தமான சின்னப்பநாயக்கன்பாளையம் பகுதியில் உள்ள நகராட்சி உயர்நிலைப் பள்ளியில் கணினி ஆய்வகம் உட்பட ஆறு வகுப்பறைகளுக்கு டைல்ஸ் மற்றும் வர்ணம் பூசி கொடுக்குமாறு தலைமை ஆசிரியர் அவர்கள் விண்ணப்பம் அளித்துள்ளனர். இதன்படி மேற்படி பள்ளிக்கு நேரில் சென்று ஆய்வு செய்யப்பட்டதில் கணினி ஆய்வுக்கூடத்திற்கு போதுமான அடிப்படை வசதிகள் ஏதும் இல்லாமலும், வகுப்பறைகள் வர்ணம் பூசி பல ஆண்டுகள் ஆன காரணத்தில் கட்டிடம் பொலிவிழந்தும் காணப்படுகிறது. எனவே, கணினி அறைக்குத் தேவையான அடிப்படை வசதிகள் செய்து வகுப்பறைகளுக்கு டைல்ஸ் பதித்து, வகுப்பறைகளுக்கு வர்ணம் பூசி இதர பழுது மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.**9,90,000/–**க்கு அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மதிப்பீட்டுத் தொகை ரூ.**9,90,000/–**க்கு அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தை நகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.14 நாள்.31.1.2020**
அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.13</u>**

இந்நகராட்சியின் பொறியர் குடியிருப்பு ஒலப்பாளையம் ரோட்டில் மேல்நிலை நீர்தேக்கத் வளாகத்தில் உள்ளது. இக்குடியிருப்பில் போதுமான வசதிகள் ஏதுவும் இல்லை. பொறியாளர்

குடியிருப்புக்கு நிரந்தரமாக இருக்கும் வகையில் மரக்கட்டில், பெட், மர சோபா செட், மர டைனிங் டேபில், டி.வி.ஸ்டாண்ட், சேர் மற்றும் இரும்பு டேபிள் ஆகியவை வாங்கி வைப்பதற்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.2,25,000/—க்கு அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மதிப்பீட்டுத் தொகை ரூ.2,25,000/—க்கு அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.15 நாள்.31.1.2020**
அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.14</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.18 பெருமாபாளையம்புதூர் பகுதியில் வீட்டு கழிவுநீர் செல்வதற்கு வழி இல்லாததால் கழிவுநீர் தேங்கியுள்ளது. இதனால் பொது மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள் என முன்னாள் நகர்மன்ற துணைத்தலைவர் தெரிவித்துள்ளார். இதன்படி மேற்படி பகுதிக்கு பொறியாளருடன் நேரில் சென்று ஆய்வு செய்யப்பட்டது. இதில் வீட்டு கழிவுநீர் செல்லாத நிலையில் உள்ளது. எனவே, மேற்படி பகுதியில் உள்ள கழிவுநீர் வெளியே செல்ல R.C.C. Chamber அமைத்து R.C.C.Pipe அமைத்து கழிவுநீர் வெளியே கொண்டு செல்வதற்கும் மற்றும் பைப் பதித்த பகுதிக்கு கான்கிரீட் மேட் அமைப்பதற்கும் தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.1,18,000/—க்கு கூட்டத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மதிப்பீட்டுத் தொகை ரூ.1,18,000/—க்கு அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி, தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதற்கும், இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.16 நாள்.31.1.2020**
அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.15</u>**

இந்நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்.21 உடையார்பேட்டை பகுதியில் பெண்கள் கழிப்பிடம் ஒன்று கட்டப்பட்டு மக்கள் பயன்பாட்டில் இருந்து வருகிறது. இந்நிலையில் நீண்ட நாட்கள் உபயோகத்தின் காரணமாக கழிப்பிடம் மிகவும் பழுதடைந்து அதன் கதவுகள், தண்ணீர் குழாய், பேசின்கள் அனைத்தும் உபயோகப்படுத்த முடியாத சூழலில் உள்ளது. இதன் காரணமாக கழிப்பிடத்தை பொது மக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் தற்போது மூடப்பட்டுள்ளது. எனவே, உடனடியாக கழிப்பிடத்திற்கு பராமரிப்பு பணி மேற்கொண்டு, பொது மக்கள் பயன்பாட்டில் விட தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.4,25,000/—க்கு அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மதிப்பீட்டுத் தொகை ரூ.4,25,000/—க்கு அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.17 நாள்.31.1.2020**
அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.16</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தமிழ்நாடு மின்சார வாரியத்தினரால் HT/LT புதைவட கேபிள்கள் பதிக்கும் பணி நடைபெற்று வருகிறது. மேற்படி கேபிள்கள் பதிக்கும் போது வார்டு எண்.28 திரு.வி.கா. சாலையில் உள்ள இரண்டு சிறுபாலங்கள், வார்டு எண்.30 கலைமகள் வீதி (நவீன தகன உலை எரிவாயு முன்புறம்) உள்ள ஒரு சிறு பாலம், வார்டு எண்.31 குள்ளப்பா வீதி (ISP கழிப்பிடம் அருகில்)

உள்ள ஒரு சிறுபாலம், வார்டு எண்.32 பண்டரி கோவில் வீதியில் உள்ள ஒரு சிறுபாலம் மற்றும் வார்டு எண்.32 கலைமகள் வீதி அங்காளம்மன் கோவில் பின்புறம் உள்ள இரண்டு சிறுபாலங்கள் சேதமடைந்து அப்பகுதி மக்களின் போக்குவரத்திற்கு இடையூறாக உள்ளது. எனவே, மேற்சொன்ன பழுதடைந்துள்ள ஏழு சிறுபாலங்களையும் இடித்துவிட்டு புதியதாக ஏழு சிறுபாலங்கள் கட்ட தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.8,20,000/—க்கு அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மதிப்பீட்டுத் தொகை ரூ.8,20,000/—க்கு அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.18 நாள்.31.1.2020**
அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.17</u>**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் TN-34 R-3431 டம்பர் பிளேசர் பிளாட் பாரம் அகற்றிவிட்டு தண்ணீர் டேங்கர் பாடி கட்டும் பணிக்கு உள்ளூர் பணிமனை உரிமையாளர்களிடமிருந்து பெறப்பட்ட விலை விபரத்தின் அடிப்படையில் ரூ.9,63,000/—க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மதிப்பீட்டுத் தொகை ரூ.9,63,000/—க்கு அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.19 நாள்.31.1.2020**
அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.18</u>**

இந்நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் 36 எண்ணிக்கை பேட்டரியில் இயங்கும் (BOV) வாகனங்கள் கொள்முதல் செய்யப்பட்டு, இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தினசரி சேகரமாகும் மக்கும் குப்பைகள் மற்றும் மக்காத குப்பைகள் ஆகியவற்றை சேகரம் செய்யும் பணிக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேற்கண்ட வாகனங்கள் வாங்கப்பட்டு ஓராண்டு வாரண்டி காலம் முடிவடைவதால், மேற்படி வாகனங்களில் ஏதேனும் பழுது ஏற்பட்டால் உள்ளூரில் இதற்கான அங்கீகரிக்கப்பட்ட பணி மனை ஏதும் இல்லாததால் சரி செய்வதில் சிரமம் ஏற்படுகிறது. இதனால், பொது சுகாதாரப் பணி பாதிக்கப்படுகிறது. எனவே, பேட்டரியில் இயங்கும் (BOV) வாகனங்களில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தார் / விற்பனையாளர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி பெற்று வருடாந்திர முறையில் (AMC) பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும், அதற்கு ஆகும் செலவினம் ரூ.11,50,000/—க்கும் கூட்டத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மதிப்பீட்டுத் தொகை ரூ.11,50,000/—க்கு அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.20 நாள்.31.1.2020**
அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.19</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட அனைத்து பகுதிகளுக்கும் குடிநீர் விநியோகம் வழங்க நீரேற்று குழாய்களிலும், பகிர்மான குழாய்களிலும் ஆங்காங்கே Valve—கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், ஆழ்துளைக் கிணறுகளிலும் மின்மோட்டார் பொருத்தி தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

ஆழ்துளைக் கிணறு அமைந்துள்ள ஒரு சில இடங்களிலும், தொட்டிகள் (Chamber) கட்டாத காரணத்தினால், மண் மற்றும் சிறு கற்களால் அவ்விடம் மூடப்பட்டு வால்வுகளை இயக்க முடியாத நிலை ஏற்படுகிறது. எனவே, நகரப் பகுதிகளில் வால்வு தொட்டிகள் (Valve Chamber) மற்றும் சிமெண்ட் மூடு கல் அமைக்க தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.2,00,000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மதிப்பீட்டுத் தொகை ரூ.2,00,000/—க்கு அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.21 நாள்.31.1.2020**
அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.20**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.10 காட்டூர் பகுதியில் உள்ள குடியிருப்புகளுக்கு, பி.எட். கல்லூரி அருகே உள்ள 20 லட்சம் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்கத் தொட்டியிலிருந்து குடிநீர் கொண்டு வரப்பட்டு 110mm PVC குழாய் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்நிலையில், சுமார் 15 வருடங்களுக்கு முன்பு பதிக்கப்பட்ட 110mm PVC குழாய்கள் நீண்ட நாட்கள் பயன்பாட்டின் காரணமாகவும், கனரக வாகனங்களின் போக்குவரத்து காரணமாகவும் மிகவும் பழுதடைந்துள்ளதால் குடிநீர் விநியோகம் மிகவும் குறைவாக வருவதாக அப்பகுதி பொது மக்கள் புகார் தெரிவித்ததையடுத்து PVC குழாய்களை அகற்றிவிட்டு புதியதாக 160mm HDPE குழாய்களை வாங்கி பதிக்கவும், மேலும் வார்டு எண்.5 நடராஜா நகர் சந்திப்பு முதல் ஈஸ்வரன் கோவில் முன்புறம் (ராசி மஹால் சந்திப்பு சாலை வரை) பழுதடைந்துள்ள 110mm PVC குழாய்களை அகற்றிவிட்டு, புதியதாக 110mm PVC குழாய் பதித்து மீண்டும் குடிநீர் விநியோகத்தினை சீர் செய்ய தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.3,45,000/—க்கு அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மதிப்பீட்டுத் தொகை ரூ.3,45,000/—க்கு அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.22 நாள்.31.1.2020**
அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.21**

இந்நகராட்சிக்கு உட்பட்ட 33 வார்டுகளிலும் உள்ள ஆழ்துளைக் கிணறு, போர்வெல் பைப் லைன் மற்றும் குடிநீர் பிரதான குழாய் ஆகியவற்றை பராமரிக்க கருவிகள், தளவாடங்கள் வாங்கி பயன்படுத்த தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.65,000/—க்கு அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மேற்படி பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.65,000/—க்கு அனுமதி வழங்கலாம். மேலும், செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.23 நாள்.31.1.2020**
அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.22**

இந்நகராட்சிக்கு சொந்தமான JCB வாகனம் TN-34 R-1914-ற்கு ஓட்டுநர் பணியிடம் புதியதாக தோற்றுவிக்கப்படாமல் உள்ளதாலும், பொது சுகாதாரப் பிரிவில் தினசரி சேகரம் செய்யும் குப்பைகளை அப்புறப்படுத்தும் பணிக்கும் பிற பணிகளுக்கும் JCB வாகனம் தேவைப்படுவதால், மேற்படி

வாகனத்தினை இயக்குவதற்கு ஒப்பந்ததாரர் மூலம் JCB வாகன ஓட்டுநர் உரிமம் பெற்ற ஒருவரை சப்ளை செய்யும் பணியினை ஆறு மாதத்திற்கு **(01.03.2020** முதல் **31.08.2020** வரையிலான காலத்திற்கு) ஒருவரை சப்ளை செய்யும் பணிக்கு ரூ.**1,05,000/—**க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மேற்படி பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.**1,05,000/—**க்கு அனுமதி வழங்கலாம். மேலும், செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.24 நாள்.31.1.2020**
அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.23</u>**

இந்நகராட்சி அலுவலகத்தில் ஆணையாளர் இருக்கை மற்றும் ஆணையாளர் அறைக்கு தேவைப்படும் இருக்கைகள் வாங்கப்பட்டு நீண்ட நாட்கள் ஆகிவிட்டபடியால் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது. எனவே, ஆணையாளர் பயன்பாட்டிற்கு ஒரு இருக்கை, ஆணையாளர் அறைக்கு நான்கு எண்ணிக்கை இருக்கைகள் வாங்கி பயன்படுத்த வைக்க ஆகும் செலவினம் ரூ.**35,000/—**க்கு அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. உத்தேச செலவினம் ரூ.**35,000/—**க்கு அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.25 நாள்.31.1.2020**
அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.24</u>**

கொமாரபாளையம் நகராட்சி அலுவலகத்தில் ஆணையாளர் இருக்கை மற்றும் ஆணையாளர் அறைக்கு தேவைப்படும் இருக்கைகள் புதியது வாங்கும் பணியினை மேற்கொள்ள 2020 ஆம் தேதி விலைப்புள்ளி அறிவிப்பு கோரியதில் கீழ்க்கண்ட நிறுவனத்தாரிடமிருந்து வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விபரத்தை தனி அலுவலரின் பார்வைக்கும் பதிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை (ரூ) |
|---|---|---|
| 1 | Thiru. K.S.Mariappan,<br>( Contractor ),<br>171, Muthu gounden Pudur,<br>Kadappa Nallur ( P.O),<br>Bhavani – 638 311. | 34800 |
| 2 | M/s. Genesis Furniture,<br>44, Perundurai road,<br>Near Karur Vysya Bank,<br>Erode – 638 011. | 36600 |
| 3 | Thiru.S.A.Chakkarabani & Sons<br>611, Mettur road,<br>Bhavani – 638 301. | 35500 |

அலுவலகக் குறிப்பு

மேற்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் வ.எண்.**1** இல் கண்டுள்ள Thiru.K.S.Mariappan , Bhavani என்பவரின் விலை விபரமானது மற்ற விலைப்புள்ளிகளின் விலை விபரத்தை விட மிகவும் குறைவாக உள்ளதால் மேற்படியாரின் விலை விபரத்தை ஏற்று பணி உத்திரவு வழங்கியமைக்கும், அதற்காகும் செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து வழங்கியமைக்கும் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.26 நாள்.31.1.2020**
அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.25**

கொமாரபாளையம் நகராட்சி எலலைக்குட்பட்ட அம்மன் நகர் மற்றும் நாராயண நகர் பகுதியில் உள்ள ஆக்கிரமிப்பு வழக்கு WP No. 3927/2017 ன் 04.09.2019 தேதி வரப்பெற்ற சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பில் மேற்படி வழக்கு தொடர்பாக அம்மன் நகர் பகுதியில் உள்ள சாலை ஆக்கிரமிப்புகளை சம்பந்தப்பட்ட ஆக்கிரமிப்புதாரர்கள் முன்னிலையில் **11.09.2019** அன்று முற்பகல் **10.30** மணிக்கு மறு அளவீடு செய்ய உத்திரவிடப்பட்டுள்ளது. மேற்படி உத்திரவின்படி ஆக்கிரமிப்புதாரர்களுக்கு அறிவிப்பு வழங்கப்பட்டு அளவீடு செய்யப்பட்டது. அறிவிப்பு வழங்குவதையும் அளவீடு செய்வதையும் அளவீடு செய்த பிறகு அளவீடு குறிப்பிட்டதையும் புகைப்படம் மற்றும் காணொளி பதிவு செய்து உயர்நீதிமன்றத்தில் அறிக்கையாக சமர்ப்பிக்க வேண்டியுள்ளது. ஆகையால் அறிவிப்பு வழங்கியதையும் அளவீடு செய்ததையும் மற்றும் அளவீடு குறிப்பிட்டதையும் R.K ஸ்டுடியோ நிறுவனத்தினர் மூலம் புகைப்படம் மற்றும் காணொளி பதிவு செய்யப்பட்டது. பிறகு அதனை அறிக்கையாக உயர்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. மேற்படி R.K ஸ்டுடியோ நிறுவனத்தாரிடம் புகைப்படம் மற்றும் காணொளி பதிவு செய்ததற்கான செலவினம் ரூ. **12500/-** ஐ வழங்க கூட்டப் பொருள் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.27 நாள்.31.1.2020**
அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.26**

நாமக்கல் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடிதம் ந.க.எண். **20509/2019/அ1** நாள். **26.12.2019** இன்படியும் , இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுரைபடியும், கொமாரபாளையம் நகராட்சியில் **01.01.2020** தகுதி நாளாகக் கொண்டு வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க முறை திருத்தப் பணிகள் மேற்கொள்ள **04.01.2020, 05.01.2020, 11.01.2020** மற்றும் **12.01.2020** ஆகிய நான்கு நாட்கள் அனைத்து வாக்குச்சாவடி மையங்களிலும் சிறப்பு முகாம்கள் நடத்த தெரிவிக்கப்பட்டுள்ளதன்படி, மேற்கண்ட முகாம்களில் பெறப்பட்டுள்ள **1768** விண்ணப்பங்கள் பெறப்பட்டு, மேற்படி விண்ணப்பங்களை இந்திய தேர்தல் ஆணையத்தின் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ள Ero.ecinet.nic.in என்ற இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய தெரிவிக்கப்பட்டதின்படி, மேற்கண்ட பணியினை உடனடியாக மேற்கொள்ள வெளி நபர்களை கொண்டு பணியினை மேற்கொள்ளப்பட்டது. எனவே அதற்காகும் செலவின தொகை ரூ.**13715/—** ஐ செலுத்த தனி அலுவலரின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி

பெற்று பணிக்காகும் செலவினத் தொகை ரூ.**13715/—** ஐ வழங்கியமைக்கும், அதற்காகும் செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொண்டமைக்கும் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.28 நாள்.31.1.2020**
அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.27**

கொமாரபாளையம் நகராட்சியில் கீழ்க்கண்ட பணிகளை செய்ய **28.01.2020**ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் முதல் அழைப்பில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு கூட்டத்தின் அனுமதிக்கும் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப் பீட்டுத் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் விபரம் | மதிப்பீட்டு சதவீதம் குறைவு / கூடுதல் |
|---|---|---|---|---|
| | <u>பொது நிதிப் பணிகள்</u> | | | |
| 1. | வார்டு எண்.7 சத்தியாபுரி அங்கன்வாடி பள்ளி உள்ள வீதியின் குறுக்கு வீதியில் பழுதடைந்துள்ள வடிகால் மற்றும் கான்கீரிட் தளத்தினை பழுது பார்த்து புதுப்பித்தல். | 1,10,000/– | திருவாளர்கள். கலைசெல்வி கன்ஸ்ட்ரக்சன்<br><br>திரு. சி.லோகநாதன் | மதிப்பீட்டுத் தொகையினைவிட **0.03 %** குறைவு.<br><br>மதிப்பீட்டுத் தொகையினைவிட **0.25 %** அதிகம். |

**அலுவலகக் குறிப்பு**

முதல் அழைப்பில் வரபெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு தொகையைவிட 0.03 சதவீதம் குறைவான தொகை கொடுத்துள்ள திருவாளர்கள். கலைசெல்வி கன்ஸ்ட்ரக்சன் என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம். மேற்படி செலவினத்தை இந்நகராட்சியின் பொது நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.29 நாள்.31.1.2020**
அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.28</u>**

கொமாரபாளையம் நகராட்சியில் கீழ்க்கண்ட பணிகளை செய்ய 28.01.2020ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் முதல் அழைப்பில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு கூட்டத்தின் அனுமதிக்கும் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப் பீட்டுத் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் விபரம் | மதிப்பீட்டு சதவீதம் குறைவு / கூடுதல் |
|---|---|---|---|---|
| | <u>குடிநீர் நிதிப் பணிகள்</u> | | | |
| 1. | வார்டு எண்.18 சத்தியா நகர் பகுதியில் ஆழ்துளை கிணற்றில் ஏற்கனவே உள்ள கைப்பம்பினை அகற்றிவிட்டு நீர்மூழ்கி மின் மின்மோட்டார் இறக்கி புதிதாக கான்கிரீட் Column அமைத்து அதன்மேல் சின்டெக்ஸ் தொட்டி வைத்து தண்ணீர் வசதி செய்தல். | 3,30,000/– | திரு.ஜே.எம்.சண்முகம்<br><br>திரு.பி.முருகன் | மதிப்பீட்டுத் தொகையினைவிட **0.25 %** குறைவு.<br><br>மதிப்பீட்டுத் தொகையினைவிட **1.03 %** அதிகம். |

**அலுவலகக் குறிப்பு**

முதல் அழைப்பில் வரபெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு தொகையைவிட 0.25 சதவீதம் குறைவான தொகை கொடுத்துள்ள திரு.ஜே.எம்.சண்முகம் என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம். மேற்காணும் பணிக்கு தீர்மான எண்.365 நாள்.30.12.2019 ஒப்புதல் பெறப்பட்டு, மேற்படி செலவினத்தை இந்நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.30 நாள்.31.1.2020**
அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.29</u>**

கொமாரபாளையம் நகராட்சியில் கீழ்க்கண்ட பணிகளை செய்ய 28.01.2020ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் முதல் அழைப்பில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு கூட்டத்தின் அனுமதிக்கும் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப் பீட்டுத் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் விபரம் | மதிப்பீட்டு சதவீதம் குறைவு / கூடுதல் |
|---|---|---|---|---|
| | <u>குடிநீர் நிதிப் பணிகள்</u> | | | |
| 1. | வார்டு எண்.29 அவ்வை மூதாட்டி வீதியில் (சிவராம் கம்பெனி சாலை) பழுதடைந்த மோட்டார் அறையினை இடித்துவிட்டு புதிதாக கான்கிரீட் Column அமைத்து அதன்மேல் சின்டெக்ஸ் தொட்டி வைத்து தண்ணீர் வசதி செய்தல். | 1,50,000/- | திரு.ஜே.எம்.சண்முகம்<br><br>திரு.பி.முருகன் | மதிப்பீட்டுத் தொகையினைவிட **0.27** % குறைவு.<br><br>மதிப்பீட்டுத் தொகையினைவிட **1.55** % அதிகம். |

**அலுவலகக் குறிப்பு**

முதல் அழைப்பில் வரபெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு தொகையைவிட 0.27 சதவீதம் குறைவான தொகை கொடுத்துள்ள திரு.ஜே.எம்.சண்முகம் என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம். மேற்காணும் பணிக்கு தீர்மான எண்.366 நாள்.30.12.2019 ஒப்புதல் பெறப்பட்டு, மேற்படி செலவினத்தை இந்நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.31 நாள்.31.1.2020**
அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.30</u>

கொமாரபாளையம் நகராட்சியில் கீழ்க்கண்ட பணிகளை செய்ய 28.01.2020ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் முதல் அழைப்பில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு கூட்டத்தின் அனுமதிக்கும் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப் பீட்டுத் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் விபரம் | மதிப்பீட்டு சதவீதம் குறைவு / கூடுதல் |
|---|---|---|---|---|
| | <u>குடிநீர் நிதிப் பணிகள்</u> | | | |
| 1. | வார்டு எண்.4 பூவரசன் வீதி, வார்டு எண்.5 திருவள்ளுவர் நகர், வார்டு எண்.15 கிழக்கு காலனி, வார்டு எண்.13 காளியண்ணன் நகர், வார்டு எண்.20 தெற்கு காலனி மற்றும் தெற்கு காலனி (முன்னாள் நகர்மன்றத் தலைவர் வீதி) மற்றும் வார்டு எண்.33 சுண்ணாம்புசூளை வீதி ஆகிய பகுதிகளில் குடிநீரல்லாத தேவைக்கான தண்ணீர் குழாய் நீட்டிப்பு செய்து தண்ணீர் வசதி செய்தல். | 6,40,000/- | திருவாளர்கள். எஸ்.ஏ.சக்கரபாணி அன்ட் சன்<br><br>திரு. பி.எம்.தட்சிணாமூர்த்தி | மதிப்பீட்டுத் தொகையினைவிட **0.71** % குறைவு.<br><br>மதிப்பீட்டுத் தொகையினைவிட **2.46** % அதிகம். |

**அலுவலகக் குறிப்பு**

முதல் அழைப்பில் வரபெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு தொகையைவிட 0.71 சதவீதம் குறைவான தொகை கொடுத்துள்ள திருவாளர்கள். எஸ்.ஏ.சக்கரபாணி அன்ட் சன் என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம். மேற்காணும் பணிக்கு தீர்மான எண்.367 நாள்.30.12.2019 ஒப்புதல் பெறப்பட்டு, மேற்படி செலவினத்தை இந்நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.32 நாள்.31.1.2020**
அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.31**

கொமாரபாளையம் நகராட்சியில் கீழ்க்கண்ட பணிகளை செய்ய 28.01.2020ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் முதல் அழைப்பில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு கூட்டத்தின் அனுமதிக்கும் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப் பீட்டுத் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் விபரம் | மதிப்பீட்டு சதவீதம் குறைவு / கூடுதல் |
|---|---|---|---|---|
| | குடிநீர் நிதிப் பணிகள் | | | |
| 1. | வார்டு எண்.2 கிழக்கு காவேரி நகர், வார்டு எண்.5 கம்பன் நகர் (ஈஸ்வரன் கோவில் தென்புற சாலை) மற்றும் கம்பன் நகர் குறுக்கு சாலைகள், வார்டு எண்.11 சேலம் மெயின் ரோடு மற்றும் வார்டு எண்.24 சேலம் மெயின் ரோடு ஆகிய பகுதிகளில் பழுதடைந்துள்ள PVC பகிர்மானக் குழாய்களை அகற்றிவிட்டு புதியதாக HDPE பகிர்மானக் குழாய்கள் அமைத்து தண்ணீர் வசதி செய்தல். | 9,80,000/– | திருவாளர்கள். எஸ்.ஏ.சக்கரபாணி அன்ட் சன்<br><br>திரு. கே.எஸ்.மாரியப்பன் | மதிப்பீட்டுத் தொகையினைவிட **0.51** % குறைவு.<br><br>மதிப்பீட்டுத் தொகையினைவிட **2.16** % அதிகம். |

**அலுவலகக் குறிப்பு**

முதல் அழைப்பில் வரபெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு தொகையைவிட 0.51 சதவீதம் குறைவான தொகை கொடுத்துள்ள திருவாளர்கள். எஸ்.ஏ.சக்கரபாணி அன்ட் சன் என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம். மேற்காணும் பணிக்கு தீர்மான எண்.368 நாள்.30.12.2019 ஒப்புதல் பெறப்பட்டு, மேற்படி செலவினத்தை இந்நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.33 நாள்.31.1.2020**
அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.32**

கொமாரபாளையம் நகராட்சியில் கீழ்க்கண்ட பணிகளை செய்ய 28.01.2020ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் முதல் அழைப்பில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு கூட்டத்தின் அனுமதிக்கும் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப் பீட்டுத் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் விபரம் | மதிப்பீட்டு சதவீதம் குறைவு / கூடுதல் |
|---|---|---|---|---|
| | குடிநீர் நிதிப் பணிகள் | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | வார்டு எண்.15 நாராயண நகர் அங்கன்வாடி மையம் அருகில் உள்ள நீர்மூழ்கி மின்மோட்டாரினை அகற்றிவிட்டு அதற்கு பதிலாக ஏற்கனவே கட்டப்பட்டுள்ள மோட்டார் அறையில் புதியதாக கம்ப்ரஸர் மோட்டார் பொருத்தி அதற்குத் தேவைப்படும் HDPE Hose–கள் கொள்முதல் செய்து தண்ணீர் வசதி செய்தல். | 1,20,000/– | திருவாளர்கள். எஸ்.ஏ.சக்கரபாணி அன்ட் சன்<br><br>திரு. பி.எம்.தட்சிணாமூர்த்தி | மதிப்பீட்டுத் தொகையினைவிட **0.15** % குறைவு.<br><br>மதிப்பீட்டுத் தொகையினைவிட **1.48** % அதிகம். |

**அலுவலகக் குறிப்பு**

முதல் அழைப்பில் வரபெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு தொகையைவிட 0.15 சதவீதம் குறைவான தொகை கொடுத்துள்ள திருவாளர்கள். எஸ்.ஏ.சக்கரபாணி அன்ட் சன் என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம். மேற்காணும் பணிக்கு தீர்மான எண்.369 நாள்.30.12.2019 ஒப்புதல் பெறப்பட்டு, மேற்படி செலவினத்தை இந்நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.34 நாள்.31.1.2020**
அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.33**

கொமாரபாளையம் நகராட்சியில் கீழ்க்கண்ட பணிகளை செய்ய 28.01.2020ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் முதல் அழைப்பில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு கூட்டத்தின் அனுமதிக்கும் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப் பீட்டுத் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் விபரம் | மதிப்பீட்டு சதவீதம் குறைவு / கூடுதல் |
|---|---|---|---|---|
| | **குடிநீர் நிதிப் பணிகள்** | | | |
| 1. | நகராட்சி பராமரிப்பில் உள்ள மினி பவர் பம்ப் ஆழ்துளை கிணறுகளின் மின்மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை பழுது பார்த்து பராமரித்தல். | 6,00,000/– | திரு.கே.தனபால்<br><br>திரு.கே.எஸ்.மாரியப்பன் | மதிப்பீட்டுத் தொகையினைவிட **0.20** % குறைவு.<br><br>மதிப்பீட்டுத் தொகையினைவிட **0.89** % அதிகம். |

**அலுவலகக் குறிப்பு**

முதல் அழைப்பில் வரபெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு தொகையைவிட 0.20 சதவீதம் குறைவான தொகை கொடுத்துள்ள திரு.கே.தனபால் என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம். மேற்காணும் பணிக்கு தீர்மான எண்.370 நாள்.30.12.2019 ஒப்புதல் பெறப்பட்டு, மேற்படி செலவினத்தை இந்நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.35 நாள்.31.1.2020**
அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.34**

கொமாரபாளையம் நகராட்சியில் கீழ்க்கண்ட பணிகளை செய்ய 28.01.2020ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் முதல் அழைப்பில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு கூட்டத்தின் அனுமதிக்கும் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப் பீட்டுத் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் விபரம் | மதிப்பீட்டு சதவீதம் குறைவு / கூடுதல் |
|---|---|---|---|---|
| | <u>குடிநீர் நிதிப் பணிகள்</u> | | | |
| 1. | வார்டு எண்.21 தம்மண்ணன் வீதி சௌண்டம்மன் கோவில் அருகில் உள்ள கைப்பம்பினை அகற்றிவிட்டு ஆழ்துளை கிணற்றில் நீர்மூழ்கி மின்மோட்டார் இறக்கி, அருகிலுள்ள மோட்டார் அறையின் மேல் 1000 லிட்டர் கொள்ளளவு கொண்ட HDPE தொட்டி வைத்து தானியங்கி நன்குடிநீர் மையத்திற்கு தண்ணீர் வசதி செய்தல். | 2,00,000/— | திருவாளர்கள். எஸ்.ஏ.சக்கரபாணி அன்ட் சன்<br><br>திரு. பி.எம்.தட்சிணாமூர்த்தி | மதிப்பீட்டுத் தொகையினைவிட **0.26** % குறைவு.<br><br>மதிப்பீட்டுத் தொகையினைவிட **1.01** % அதிகம். |

**அலுவலகக் குறிப்பு**

முதல் அழைப்பில் வரபெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு தொகையைவிட 0.26 சதவீதம் குறைவான தொகை கொடுத்துள்ள திருவாளர்கள். எஸ்.ஏ.சக்கரபாணி அன்ட் சன் என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம். மேற்காணும் பணிக்கு தீர்மான எண்.371 நாள்.30.12.2019 ஒப்புதல் பெறப்பட்டு, மேற்படி செலவினத்தை இந்நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.36 நாள்.31.1.2020**
அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.35</u>**

கொமாரபாளையம் நகராட்சியில் கீழ்க்கண்ட பணிகளை செய்ய 28.01.2020ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் முதல் அழைப்பில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு கூட்டத்தின் அனுமதிக்கும் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப் பீட்டுத் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் விபரம் | மதிப்பீட்டு சதவீதம் குறைவு / கூடுதல் |
|---|---|---|---|---|
| | <u>குடிநீர் நிதிப் பணிகள்</u> | | | |
| 1. | கொமாரபாளையம் நகராட்சியில் குடிநீர் விநியோகப் பணிக்கு தேவைக்கப்படும் ப்ளீச்சிங் பவுடர் மற்றும் ஆலம் கட்டிகள் சப்ளை செய்தல். | 1,50,000/— | திருவாளர்கள். ரக்ஷிதா கெமிக்கல்ஸ் அன்ட் டிரேடர்ஸ்<br><br>திருவாளர்கள். எம்.ஆர்.டைஸ் அன்ட் கெமிகல்ஸ் | ஒப்பந்தத் தொகை ரூ.1,49,000/—<br><br>ஒப்பந்தத் தொகை ரூ.1,51,500/— |

**அலுவலகக் குறிப்பு**

முதல் அழைப்பில் வரபெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு தொகையைவிட ரூ.1,49,000/— குறைவான தொகை கொடுத்துள்ள திருவாளர்கள். ரக்ஷிதா கெமிக்கல்ஸ் அன்ட் டிரேடர்ஸ் என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம். மேற்காணும் பணிக்கு தீர்மான எண்.383 நாள்.30.12.2019 ஒப்புதல் பெறப்பட்டு, மேற்படி செலவினத்தை இந்நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.37 நாள்.31.1.2020**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.36**

கொமாரபாளையம் நகராட்சியில் கீழ்க்கண்ட பணிகளை செய்ய **29.01.2020**ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் முதல் அழைப்பில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு கூட்டத்தின் அனுமதிக்கும் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப் பீட்டுத் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் விபரம் | மதிப்பீட்டு சதவீதம் குறைவு / கூடுதல் |
|---|---|---|---|---|
| | **பொது நிதிப் பணிகள்** | | | |
| **1.** | வார்டு எண்.25ல் உள்ள அண்ணா நகர் பகுதியில் பொது சுகாதார பிரிவு–4க்கு புதியதாக பகுதி (Division) அலுவலகம் கட்டுதல். | **9,00,000/–** | திரு.பி.முருகன் | மதிப்பீட்டுத் தொகையினைவிட **0.25 %** குறைவு. |
| | | | திருமதி.டி.சரஸ்வதி | மதிப்பீட்டுத் தொகையினைவிட **1.65 %** அதிகம். |

**அலுவலகக் குறிப்பு**

முதல் அழைப்பில் வரபெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு தொகையைவிட **0.25** சதவீதம் குறைவான தொகை கொடுத்துள்ள திரு.பி.முருகன் என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம். மேற்காணும் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதற்கும், மேற்படி செலவினத்தை இந்நகராட்சியின் பொது நிதியில் மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.38 நாள்.31.1.2020**
அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.37**

கொமாரபாளையம் நகராட்சியில் கீழ்க்கண்ட பணிகளை செய்ய **29.01.2020**ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் முதல் அழைப்பில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு கூட்டத்தின் அனுமதிக்கும் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப் பீட்டுத் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் விபரம் | மதிப்பீட்டு சதவீதம் குறைவு / கூடுதல் |
|---|---|---|---|---|
| | **பொது நிதிப் பணிகள்** | | | |
| **1.** | வார்டு எண்.4ல் உள்ள பாரதி நகர் பகுதியில் பொது சுகாதார பிரிவு–2க்கு புதியதாக பகுதி (Division) அலுவலகம் கட்டுதல். | **9,70,000/–** | திருமதி.டி.சரஸ்வதி | மதிப்பீட்டுத் தொகையினைவிட **0.24 %** குறைவு. |
| | | | திரு.பி.முருகன் | மதிப்பீட்டுத் தொகையினைவிட **1.37 %** அதிகம். |

**அலுவலகக் குறிப்பு**

முதல் அழைப்பில் வரபெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு தொகையைவிட **0.24** சதவீதம் குறைவான தொகை கொடுத்துள்ள திருமதி.டி.சரஸ்வதி என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம். மேற்காணும் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதற்கும், மேற்படி செலவினத்தை இந்நகராட்சியின் பொது நிதியில் மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.39 நாள்.31.1.2020**
அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.38**

கொமாரபாளையம் நகராட்சியில் கீழ்க்கண்ட பணிகளை செய்ய **28.01.2020**ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் முதல் அழைப்பில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு கூட்டத்தின் அனுமதிக்கும் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப் பீட்டுத் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் விபரம் | மதிப்பீட்டு சதவீதம் குறைவு / கூடுதல் |
|---|---|---|---|---|
| | **பொது நிதிப் பணிகள்** | | | |
| 1. | வார்டு எண்.15 சுள்ளிமடைத் தோட்டம் பெண்கள் கழிப்பிடத்திற்கு பழுது மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல். | 3,50,000/– | திருவாளர்கள். கலைசெல்வி கன்ஸ்ட்ரக்சன்<br><br>திரு. சி.லோகநாதன் | மதிப்பீட்டுத் தொகையினைவிட **0.28** % குறைவு.<br><br>மதிப்பீட்டுத் தொகையினைவிட **1.22** % அதிகம். |

**அலுவலகக் குறிப்பு**

முதல் அழைப்பில் வரபெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு தொகையைவிட **0.28** சதவீதம் குறைவான தொகை கொடுத்துள்ள திருவாளர்கள். கலைசெல்வி கன்ஸ்ட்ரக்சன் என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம். மேற்காணும் பணிக்கு தீர்மான எண்.**364** நாள்.**30.12.2019** ஒப்புதல் பெறப்பட்டு, மேற்படி செலவினத்தை இந்நகராட்சியின் பொது நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.40 நாள்.31.1.2020**
அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.39**

கொமாரபாளையம் நகராட்சியில் கீழ்க்கண்ட பணிகளை செய்ய **14.01.2020**ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் முதல் அழைப்பில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு கூட்டத்தின் அனுமதிக்கும் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப் பீட்டுத் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் விபரம் | மதிப்பீட்டு சதவீதம் குறைவு / கூடுதல் |
|---|---|---|---|---|
| | **பொது நிதிப் பணிகள்** | | | |
| 1. | வார்டு எண்.31 கலைவாணி தெருவில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான சமுதாயக் கூடத்தின் இடிந்து விழும் நிலையில் உள்ள சுற்றுச்சுவரை இடித்துவிட்டு புதியதாக சுற்றுச்சுவர் கட்டுதல். | 4,20,000/– | திரு.பி.சின்னண்ணன்<br><br>திரு.சி.லோகநாதன் | மதிப்பீட்டுத் தொகையினைவிட **0.20** % குறைவு. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | மதிப்பீட்டுத் தொகையினைவிட **1.49** % அதிகம். |

**அலுவலகக் குறிப்பு**

முதல் அழைப்பில் வரபெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு தொகையைவிட **0.20** சதவீதம் குறைவான தொகை கொடுத்துள்ள திரு.பி.சின்னண்ணன் என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம். மேற்காணும் பணிக்கு தீர்மான எண்.**363** நாள்.**30.12.2019** ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. மேலும் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதற்கும், மேற்படி செலவினத்தை இந்நகராட்சியின் பொது நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.41 நாள்.31.1.2020**
அனுமதிக்கப்பட்டது.

தனி அலுவலர் (மற்றும்)
ஆணையாளர்,
கொமாரபாளையம் நகராட்சி.